செய்தி வெளியீடு எண். 49-2016 நாள்: 21.10.2016

**விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, செஞ்சி ஆகிய வட்டங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட தலைமை நீதிபதிகள் குடியிருப்புகளை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர்கள் திரு.நுட்டி.இராமமோகன ராவ் அவர்கள், திரு.ரவிச்சந்திரபாபு அவர்கள், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (22.10.2016) திறந்து வைத்தார்கள்.**

*****

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, செஞ்சி ஆகிய வட்டங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட தலைமை நீதிபதிகள் குடியிருப்புகளை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர்கள் திரு.நுட்டி.இராமமோகன ராவ் அவர்கள், திரு.கே.ரவிச்சந்திரபாபு அவர்கள், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (22.10.2016) திறந்து வைத்தார்கள்.

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டத்தில் ரூ.992.61 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தினையும், ரூ.88.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தலைமை நீதிபதிகள் குடியிருப்பு கட்டடத்தினையும், கள்ளக்குறிச்சி வட்டத்தில் ரூ.799.66 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் மற்றும் மாவட்ட நீதிபதிகள் குடியிருப்பு கட்டடத்தினையும், செஞ்சி வட்டத்தில் ரூ.839.63 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தினையும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர்கள் திரு.நுட்டி.இராமமோகன ராவ் அவர்கள், திரு.கே.ரவிச்சந்திரபாபு அவர்கள், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (22.10.2016) திறந்து வைத்தார்கள்.

இவ்விழாவில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் பேசியதாவது:

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் 100 சதவிகிதம் அரசு சொந்த கட்டடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 48 நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இவற்றில் 39 நீதிமன்றங்கள் ஏற்கனவே அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. இன்று மட்டும் 6 நீதிமன்றங்கள் திறக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 நீதிமன்றங்களில், திண்டிவனம்

வட்டத்தில் நீதிமன்றம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. சங்கராபுரம் வட்டத்தில் நீதிமன்றம் கட்டுவதற்கு இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வானூர் வட்டத்தில் நீதிமன்றம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிமன்ற கட்டுமானப் பணிகள் முடிந்தவுடன் விழுப்புரம் மாவட்டத்தில் 100 சதவிகிதம் நீதிமன்றங்கள் அரசு கட்டடத்தில் செயல்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில் 89.6 சதவிகிதம் நீதிமன்றங்கள் அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், நீதிமன்ற உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டிற்காக ரூ.516 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 93 கோடி மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீதிதுறைக்கு அனைத்து சலுகைகளையும் அளிப்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசுதான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன் என தெரிவித்தார்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள், திண்டிவனம் சார் ஆட்சியர் திரு.பி.என்.ஸ்ரீதர்,இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கே.எஸ்.நரேந்திரன் நாயர்,இ.கா.ப., அவர்கள், மாவட்ட முதன்மை நீதிபதிகள் திருமதி.பி.சரோஜினி தேவி, திருமதி.எம்.சுபா அன்புமணி, ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை, உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.பிரபு மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.